அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.231/2015
தேதி. 23.9.2015

# காவிரி நிர்வாகக்குழு கூட்டத்தில் காவிரி மேலாண்மை வாரியத்தை பிரதமர் அறிவிக்க வேண்டும்

## ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ கோரிக்கை

நீண்ட நெடுங்காலமாக தொடர் பிரச்னையாக நீடித்து வரும் காவிரி நீர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக, காவிரி நடுவர் மன்றம் தமிழகத்திற்கு உரிமையுள்ள 192 டி.எம்.சி. தண்ணீர் ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது. தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்து இத்தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு என்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு இணையானது மட்டுமல - அத்தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டால் அதற்கு மிஞ்சிய தீர்ப்பு எதுவும் இல்லை என்பது நியதி.

ஆனால், கர்நாடக அரசு முன்னதாக வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும், தொடர்ந்து காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பையும், அத்தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதையும் மதிக்காது, நியாயப்படி வழங்கவேண்டிய தண்ணீரை வழங்காதிருக்கும் அநீதியைத் தமிழகத்திற்குத் தொடர்ந்து இழைத்து வருகிறது. கர்நாடகத்தில் மழைக்காலத்தில் கிடைக்கும் உபரிநீரை மட்டுமே தமிழகத்திற்குத் திறந்துவிடும் வாடிக்கையான பழக்கத்தை மட்டுமே தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

இந்த ஆண்டு பருவமழை குறைவாக பெய்ததைக் காரணம் காட்டி ஆண்டுதோறும் வழக்கமாக வெளியேற்றும் அளவிற்குக் கூட கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விடவில்லை. இதனால் தமிழகத்தில் குறுவை சாகுபடி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது நிதர்சனமான உண்மை. மேலும் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டியே தீருவோம் என்ற அபாய அறிவிப்பையும் கர்நாடக அரசு அறிவித்திருக்கிறது. அந்த வகையில் தமிழகத்திற்கு கர்நாடக அரசு இழைத்துவரும் அநீதி நின்றபாடில்லை.

இந்நிலையில் டெல்லியில் வரும் 28 ஆம் தேதி பாரதப் பிரதமர் மோடி தலைமையில் காவிரி நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற உள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது. இக்கூட்டம் வழக்கமான சம்பிரதாயமான கூட்டமாக

இல்லாமல், காவிரிப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விதமாகவும், தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்படும் விதமாகவும் அமைய வேண்டும் என்றும், அதற்கேற்ற வகையில் பிரதமர் உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

மேலும் காவிரி மேலாண்மை வாரியம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடுவதை கண்காணித்து உறுதி செய்ய வேண்டும். இப்போதுள்ள அணைகளில் தேக்கி வைக்கும் தண்ணீர் காரணமாக தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் மேலும் புதிதாக அணைகள் கட்டினால் தமிழகம் பாலைவனமாகி விடும். எனவே, மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசுக்கு அனுமதி அளிக்கக்கூடாது. இக்கூட்டத்தின் தொடர்ச்சியாக மாநிலங்களுக்கிடையே நதிநீர்ப் பிரச்னைகள் இனியும் ஏற்படாதிருக்க நதிகளைத் தேசிய மயமாக்குதல் குறித்து பரிசீலித்து அதற்கான துவக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் அவர்களை சமத்துவ மக்கள் கட்சி சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.